




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்









| Vol: 03 | Issue: 2 | 4 Pages | 2.8.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| லர்: 03 | இதழ்: 2 | 4 பக்கங்கள் | 2.8.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு**

**விளக்கம்:** மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

## மேற்கு வங்காளத்தில் துர்கா பூஜைக்கு ரூ.400 கோடி செலவு




கொல்கத்தா, ஆக. 2

மேற்கு வங்காள மாநிலத்தின் மிக முக்கிய பண்டிகையான துர்கா பூஜை, ஆண்டுதோறும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. எருமைத்தலை கொண்ட மகிஷாசூரனை, துர்க்கா தேவி வதம் செய்து வெற்றி கொண்ட தினமான விஜயதசமி, மேற்கு வங்காள முக்கியமான திருவிழாவாகும்.

மேற்கு வங்காளத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் கீழ், துர்க்கை அம்மனின் சிலைகள் நிறுவப்படும். இதற்காக மாநிலம் முழுவதும் எராளமான கமிட்டிகள் உருவாகும். அந்த கமிட்டிகளுக்கு மேற்கு வங்காள அரசு ஆண்டுதோறும் நிதி வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு துர்கா பூஜைகளுக்காக மட்டும் ஒவ்வொரு கமிட்டிக்கும் தலா ரூ. 85 ஆயிரம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த ஆண்டு ஒவ்வொரு துர்கா பூஜை கமிட்டிக்கும் தலா ரூ.1.10 லட்சம் வழங்கப்படும் என்று மேற்கு வங்காள முதல்மந்திரி மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார். இதன் மூலம் இந்த ஆண்டு துர்கா பூஜைக்கு மேற்கு வங்காள மாநில அரசு ரூ.400 கோடி செலவிட உள்ளது. கடந்த ஆண்டு ரூ.340 செலவழிக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு கூடுதலாக ரூ.60 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## பார்வையிழந்து அவதிப்படும் காட்டு யானைக்கு சிகிச்சை அளிக்க வனத்துறை முடிவு



பாலக்காடு, ஆக. 2

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம்காஞ்சிக்கோடுவலியேறி பகுதியில் பாலக்காடு டஸ்கர்5 என்று அழைக்கப்படும் காட்டு யானை புகுந்து நடமாடியது. தகவல் அறிந்த வனத்துறையினர் அங்கு வந்து யானை நடமாட்டத்தை கண்காணித்தனர்.

அப்போது காட்டு யானையின் நெற்றி, கால்களில் காயங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அதோடு யானைக்கு பார்வை குறைபாடு உள்ளதால், பல இடங்களில் சுவரில் மோதி காயமடைந்து இருக்கலாம் என தெரிகிறது. இதனால்கண்களில்இருந்துநீர்வடிவதோடு,நடக்கசிரமப்படுகிறது.

தற்போது அந்த யானை கோங்காட்டுப்பாடு வனப்பகுதியில் உள்ளது என்றும், கடும் வலியால் அவதிப்படுவதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த காட்டு யானையை மயக்க ஊசி செலுத்தி பிடித்து சிகிச்சை அளிப்பது குறித்து வனத்துறையினர் ஆலோசனை நடத்தினர். இதற்காக சிறப்பு குழு இன்று வந்தது. ஏற்கனவே காட்டு யானை ஒரு கண்ணில் பார்வையிழந்து இருந்தது. தற்போது மற்றொரு கண்ணிலும் பார்வை குறைபாடு ஏற்பட்டு உள்ளதை தொடர்ந்து, சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

## 8 முறை திருமணம்.. லட்சக்கணக்கில் பணம் பறிப்பு; 9வது திருமணத்திற்கு தயாரான ஆசிரியை கைது



மும்பை, ஆக. 2

மராட்டிய மாநிலம் நாக்பூரில் பல ஆண்களை திருமணம் செய்து, அவர்களை ஏமாற்றி பணம் பறிப்பது சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்த பெண்ணை போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்ணின் பெயர் சமீரா பாத்திமா என்பதும், அவர் ஒரு ஆசிரியையாக பணியாற்றி வந்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சமீரா பாத்திமா இதுவரை 8 ஆண்களை திருமணம் செய்து ஏமாற்றியுள்ளார். கடந்த 15 ஆண்டுகளாக இந்த மோசடி செயலை அவர் அரங்கேற்றி வந்துள்ளார். பணக்காரர்கள், ஏற்கனவே திருமணமான ஆண்கள் ஆகியோரை குறிவைத்து பழகி, அவர்களை தனது வலையில் சமீரா வீழ்த்தியுள்ளார். தனது 'அடுத்த கணவரை' கண்டுபிடிக்க சமூக வலைதளங்கள், திருமண இணையதளங்கள் ஆகியவற்றை சமீரா பயன்படுத்தியுள்ளார்.

அதிகபட்சமாக தனது முந்தைய கணவர் ஒருவரிடம் இருந்து ரூ.50 லட்சம், மற்றொரு கணவரிடம் இருந்து ரூ.15 லட்சம் பணத்தை சமீரா பறித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. அவரிடம் பணத்தை இழந்த நபர்கள் போலீசில் இது குறித்து புகார் அளித்த நிலையில், சமீராவை கடந்த 29ந்தேதி போலீசார் அதிரடியாக கைது செய்தனர். அவரை கைது செய்தபோது சமீரா 9வது திருமணத்திற்கு தயாராகி வந்ததாக போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும் சமீராவுடன் இணைந்து மோசடியை அரங்கேற்றிய கும்பலை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# திருவண்ணாமலையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஆக. 2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதல் அமைச்சர் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, மத்திய அரசின் 202425 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டு கலைஞர் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 லட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதல்அமைச்சரால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதல்அமைச்சரால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை

மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.



இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க

நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம் மற்றும் திருப்பூர் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 24.06.2022 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 18.02.2023 அன்றும், தூத்துக்குடி, தஞ்சாவூர், மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 19.05.2023 அன்றும் முதல் அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும் முதல் அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டன. திருப்பூர், வேலூர் மற்றும் காரைக்குடி மினி டைடல் பூங்காக்களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை விரைவில் செயல்பட துவங்கும். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான வடிவமைப்பு பணிகள் முடிவுற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, திருவண்ணாமலையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூகபொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூ.46.75 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப்பணிகள் அமைச்சர் சேகர்பாபு ஆய்வு

சென்னை, ஆக. 2

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சரின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (01.08.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி. கே. சேகர்பாபு, திரு. வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், வார்டு69, முத்துகுமாரப்பாதெருவில்பெருநகரசென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த சமுதாய நலக் கூடமானது, தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 40,300 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. தரைத்தளத்தில் 35 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள், 50 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம், முதல் தளத்தில் 435 இருக்கைகளுடன் உணவு அருந்தும் இடம், இரண்டாம் தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண நிகழ்வு கூடம், மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான ஓய்வறைகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, சோமையா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் 10 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணி, ரங்கசாயி தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி மற்றும் இப்பள்ளியில் எதிரில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தில் ரூ.49 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி ஆகியவற்றினை அமைச்சர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு67, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ரூ.9.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வார்டு அலுவலகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திடும் வகையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கவுஷிக், மண்டலக் குழுத் தலைவர் மு. சரிதா மகேஷ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பாடியநல்லூர் ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழா



மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி திருப்பூர் குமரன் தெருவில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள் மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா ஆலய ஸ்தாபகர் பூங்காவனம் மேஸ்திரி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ராசாத்தி அம்மாள் திருக்கரங்களால் அம்மனுக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம், சந்தனம், பன்னீர், ஜவ்வாது, தேன் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை நடைபெற்றது. இதணைத்தொடர்ந்து ஆடிப்பூரம் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ நாகாத்தம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் கண்ணாடி வளையல்களால் அலங்காரம் செய்து தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. மேலும் இந்த ஆலயத்தில் குழந்தை பாக்கியம்கிடைத்திடவேண்டி விரதம் இருந்து நெய்தீபம் ஏற்றிவைத்து அர்ச்சனைகள் செய்து தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டாரபக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு ஸ்ரீநாகாத்தம்மன் அருளை பெற்று சென்றனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# நாரணமங்கலம் கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மாவட்ட கலெக்டர் ஆய்வு



பெரம்பலூர், ஆக. 2

பெரம்பலூர் மாவட்டத்தில் நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் 15.07.2025 அன்று முதல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, சிறப்புடன் நடைபெற்று வருகிறது. அதன்படி, ஊரகப் பகுதிகளுக்கான முகாம் நாரணமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் பார்வையிட்டு, பொதுமக்களிடம் தேவைகள் மற்றும் கோரிக்கை தொடர்பாக கேட்டறிந்தார். அப்போது அவர் தனக்கு ரத்த அழுத்தம் எவ்வளவு உள்ளது என்று மருத்துவத்துறையினரிடம் பரிசோதனை செய்து கொண்டார்.

பின்னர், மனுக்கள் வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல்களை அலுவலர்கள் பொதுமக்களுக்கு வழங்கிடவும், அனைத்து மனுக்களுக்கும் விரைந்து தீர்வு ஏற்படுத்திட வேண்டும் என பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரசு துறைகளின் சேவைகள் தொடர்பாக முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஊரக பகுதிகளில் 15 அரசுத்துறைகள் பங்கேற்று 46 சேவைகளையும், நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகள் பங்கேற்று 43 சேவைகளையும் நேரடியாக வழங்கி வருகிறது, மேலும் இம்முகாமில் பொதுமக்கள் அளிக்கப்படும் அனைத்து மனுக்களும் இணைய வழியாக பதிவேற்றம் செய்து தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினரிடம், நாரணமங்கலம் கிராமத்தில் உள்ள இளைஞர்கள் விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள் கேட்டனர். விரைவில் விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அதன் பிறகு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் நாரணமங்கலம் முதல்

விஜயகோபாலபுரம் மண் சாலையை தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஆதிதிராவிடர் காலணி மேற்கு பகுதியில் 30 குடும்பங்களுக்கு பட்டா கிடைக்காமல் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிரமப்பட்டு வருவதாகவும் பட்டா கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். வருவாய்த்துறை அதிகாரிகளிடம் பேசி பட்டா கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டமன்ற உறுப்பினர் அறிவுறுத்தினார். இதில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், வட்டாட்சியர் முத்துக்குமரன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேமலதா, காவல் ஆய்வாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டம் கோபி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட டி. என். பாளையம் தெற்கு ஒன்றியம் புள்ளப்ப நாயக்கன் பாளையம் பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம்



ஈரோடு மாவட்டம் கோபி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட டி. என். பாளையம் தெற்கு ஒன்றியம் புள்ளப்ப நாயக்கன் பாளையம் பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஏழுர் அரசு மேல்நிலை பள்ளியில் நடைபெற்றது. முகாமினை தாசில்தார் இரா. சரவணன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து மண்டல துணை தாசில்தார் மணிமேகலை, வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலக்ஷ்மி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் என். நல்லசிவம், ஒன்றிய செயலாளர்கள் ஜம்பு (எ )கே.கே. சண்முகம்(தெற்கு ), எம். சிவபாலன் (வடக்கு ) ஆகியோர் முகாமிற்கு வருகை புரிந்த பொதுமக்களிடம் மனுக்களை பெற்றும், முகாமையும் ஆய்வு செய்தனர். இதில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி, காவல், மருத்துவம், எரிசக்தி, மகளிர் உரிமை தொகை, நல வாரியம், முதலமைச்சர் காப்பீடு உட்பட பல துறைகள் இடம் பெற்று இருந்தன. முகாமில் ஒரு சில மனுக்களுக்கு முகாமிலேயே தீர்வு காணப்பட்டு பயனாளியிடம் ஆணை நகல் ஒப்படைக்க பட்டது. இதில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், திமுக கவுன்சிலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மஞ்சநாயக்கனஹள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட சின்னகடமடை சமுதாயகூடம் அருகில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்



பென்னாகரம், ஆக.2

பென்னாகரம் வட்டம் மஞ்சநாயக்கனஹள்ளி மற்றும் மரங்கரை பஞ்சாயத்திற்கு உட்பட்ட புதுப்பட்டி நரசிபுரம் எட்டிக்குழி பெரியகடமடை சின்னகடமடை மாங்கரை பஞ்சாயத்திற்கு உட்பட்ட மாங்கரை வண்ணாத்திப்பட்டி ஆதனூர் சாலைகுள்ளாதிரம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமப் பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நேற்று சின்ன கடமடை சமுதாயக்கூடம் அருகில் நடைபெற்றது. முகாமில் முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை, பட்டப் பெயர் மாற்றம், கலைஞரின் வீடு வழங்கும் திட்டம், இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, மகளிர் உரிமைத்தொகை உதவித் தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வேண்டி 45 துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த ஸ்டால்களில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களை அளித்தனர். இந்த நிலையில் சின்னகடமடை சமுதாயக்கூடம் அருகில் நடைபெற்ற இம்முகாமை துணை ஆட்சியர் கலால் நர்மதா பார்வையிட்டு, பொதுமக்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்து, 45 நாட்களுக்குள் உரிய தீர்வினை காண அந்தந்த துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதில் திட்ட இயக்குனர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டாட்சியர் சண்முகசுந்தரம் மண்டல துணை வட்டாட்சியர் நாகவேணி வருவாய் ஆய்வாளர் விஜயசாந்தி கிராம நிர்வாக அலுவலர் ஜெய்கர் திமுக ஏரியூர் ஒன்றிய செயலாளர் என் செல்வராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை மீனாட்சி மருத்துவமனையில் நவீன டயாலிசிஸ் மூலம் சிறுநீரக நோயாளிக்கு சிகிச்சை



தஞ்சாவூர், ஆக. 2

தஞ்சையில் உள்ள மீனாட்சி மருத்துவமனையில் 40 வயது நோயாளிக்கு திடீரென்று ஏற்பட்ட சிறுநீரக செயலிழப்பை சிறுநீரக தொடர் மாற்று சிகிச்சை முறை மூலம் சரி செய்திருக்கிறது. நீர்ச்சத்து, எலெட்ரோலைட் சமமின்மை பிரச்சனை உள்ள சிறுநீரக நோயாளிகளுக்கு உகந்த சிகிச்சை இதுவாகும்.

தஞ்சை மீனாட்சி மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் குழு, துரிதமாக செயல்பட்டு 24 மணி நேரத்தில் அவசர கால மருத்துவ நடைமுறைகளைப் பின்பற்றி, சி.ஆர்.டி.டி. சிகிச்சையை மேற்கொண்டு, நோயாளியின் உடல்நிலையை சீராக்கியது. 48 மணி நேர சிகிச்சைக்குள்ளாகவே நோயாளியிடம் அவர் குணமடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கின. இயல்பான முறையில் சிறுநீரும் வெளியேறியது. இது, சிறுநீரகம் சிறப்பாக இயங்குகிறது என்பதைக் காட்டும் அறிகுறி ஆகும். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது நோயாளியின் கிரியாட்டினைன் அபாய அளவில் இருந்தது. இந்த சிகிச்சையை அடுத்து, பாதுகாப்பான நிலைக்கு வந்துவிட்டது.

டெல்டா பிராந்தியத்தில் சிறுநீரக மாற்று தொடர் சிகிச்சையில் சிஆர்டிடி சிறப்பாக இயங்கும் மருத்துவமனை. திடீரென்று சிறுநீரகம் செயலிழந்த நிலையில் வரும் நோயாளிகளுக்கு வழக்கமான இரத்த சுத்திகரிப்பு முறையைப்போலல்லாது, இம்முறையில் 24 மணிநேர தொடர் சிகிச்சை இருக்கும். தேவையற்ற கழிவுகள், மிகையாக உடலில் சேர்ந்த திரவங்கள், இரத்த அழுத்தத்தை நிலைப்படுத்தும்போது உருவாகும் நச்சுப்பொருட்கள் ஆகியவை அகற்றப்படும். மிக அவசர நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு இது உகந்த சிகிச்சை முறையாகும். இந்த நவீன சிகிச்சை முறைக்கு சி.ஆர்.ஆர்.டி. இயந்திரங்களும், நுணுக்கமான கண்காணிப்பு மற்றும் மருத்துவ நடைமுறைகளில் தேவையான மாற்றங்களையும் செய்யத்தக்க திறன் வாய்ந்த நரம்பியல் நிபுணர்களும் தேவை. கடந்த சில மாதங்களாக, இந்த நவீன சிகிச்சை முறை மூலமாக, மோசமான உடல்நிலையுடன் இருந்த 8 நோயாளிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இதுகுறித்து சிறுநீரகவியல் துறையின் ஆலோசகரும் நிபுணருமான மருத்துவர் எஸ்.கௌரி சங்கர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது: நோயாளி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது மோசமான உடல் நிலையுடன் இருந்தார். அவரது இரத்த அழுத்தம், மிகக் குறைவான நிலையில் இருந்தது. சிறுநீரகங்கள் முழுமையாக செயலிழந்துவிட்டன. சிறுநீர் பிரியவே இல்லை. அவரது இதயம் செயல்படுவதற்காக இரண்டு இன்ரோப் மருந்துகள் அளிக்கப்பட்டன. உடனடியாக அவரது இரத்த அழுத்தம் சீரானது. சுவாசத்துக்கான சிகிச்சை நடைமுறைகளும் வழங்கப்பட்டன. மேலும் உடலின் நீர்ச்சத்தும் எலெக்ட்ரோலைட் சமநிலையும் சீராக்கப்பட்டன. சிஆர்ஆர்டி நடைமுறை தொடங்கப்பட்டதும் அது, நோயாளி குணமடையப் பெரிதும் உதவி செய்தது. இந்த நடைமுறை, சிக்கலானதாகவும், கூடுதல் வள ஆதாரங்கள் தேவைப்படுவதாகவும் இருக்கும் என்றாலும் கூட, எமது தேர்ந்த சிறுநீரகவியல் மருத்துவக் குழுவும் அவசர சிகிச்சைக் குழுவும் ஒவ்வொரு மருத்துவ நடைமுறையையும் பின்பற்றி, அதனை வெற்றிகரமாக செய்து முடித்தன. நோயாளியின் உடல் நிலை இருந்த மோசமான சூழலில் சிஆர்ஆர்டி சிகிச்சை மட்டும் இலையென்றால் குணப்படுத்துவது இயலாத ஒன்றாகியிருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது தஞ்சை மீனாட்சி மருத்துவமனையின் மருத்துவ அவசர சிகிச்சை மற்றும் நஞ்சியல் துறையின் தலைவரும் மருத்துவ ஆலோசகருமான செந்தில்குமார், துணை மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர். வி.பிரவீன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வேலூர் மாவட்டத்தில் மாணவர்களுக்கு போதை மாத்திரை, ஊசிகள் விற்க முயன்றவர்கள் கைது

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு போதை மாத்திரை, போதைஊசிகளை விற்க முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன் உத்தரவின் பேரில், தனிப்பிரிவு காவல்துறையினர் பள்ளிகொண்டா சுற்றுப்புற பகுதிகளில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது தேசிய நெடுஞ்சாலை அருகே ராமாபுரம் சாலையில் வாலிபர்கள் சிலர் சந்தேகப்படும்படி நின்றிருந்தனர். அவர்களை சோதனை செய்த போது, போதை ஊசிகள், போதை மாத்திரைகள் வைத்திருந்துள்ளனர். இதனை அங்குள்ள அரசுப்பள்ளி மாணவர்களுக்கு விற்க முயன்றதும் தெரிய வந்தது. பிடிபட்ட 5பேரைபள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். காவல் துறை விசாரணையில் அவர்கள் சின்னசேரி விக்னேஷ் (25), வேப்பங்கால் ஆனந்தன்(22), மணி கண்டன் (24), ராஜி (23), மல்லா(35) ஆகிய 5பேர் என்பது தெரிய வந்தது. அவர்களை கைது செய்து, அவர்களிடம் இருந்த போதை மாத்திரை, ஊசிகள், கத்திகள், செல்போன்களை பறிமுதல் செய்தனர். பின்னர் 5 பேரையும் நீதிமன்றத்தில் சிறையில் அடைத்தனர்.

கைதானவர்களின் செல்போன்களை ஆய்வு செய்த போது மேலும் 8 பேருக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. பள்ளிகொண்டா அடுத்த வெட்டுவாணம் மாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்த தீபக்(35), தெலங்கானா மாநிலம் கத்துவால் மாவட்டம் ராமச்சந்திரா நகரை சேர்ந்த ரமேஷ்(28), குடியாத்தம் ஆர்டிஓ அலுவலக சாலையை சேர்ந்த ஜீவா(25), பள்ளிகொண்டா மளிகை தெருவை சேர்ந்த கவின் (20), வேப்பங்கால் ராமாபுரம் ரோட்டை சேர்ந்த விக்னேஷ் (26), பள்ளிகொண்டா ரங்கநாதர் கோயில் தெருவை சேர்ந்த சத்தியசீலன் (21), கீழாச்சூர் புத்தன் நகரை சேர்ந்த ஜியாஜ்(26), ஆகாஷ் (25) ஆகிய 8 பேரையும் கந்தனேரி தேசிய நெடுஞ்சாலை அருகே உள்ள மலையடிவாரத்தில், துணைகாவல் கண்காணிப்பாளர் தனிப்படை காவலர்கள், பள்ளிகொண்டா உதவி ஆய்வாளர் முத்துக்குமார் மற்றும் காவலர்கள் கூட்டாக சென்று கைது செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் வெட்டுவானத்தை சேர்ந்த தீபக் என்பவர், கடந்த 2023ம் ஆண்டு கஞ்சா விற்பனை மற்றும் போதை மாத்திரை விற்பனையில் கைதாகி சிறைக்கு சென்றார். பின்னர் வெளியே வந்த அவர், சொந்த ஊரில் வசிக்காமல் தெலங்கானாவுக்கு சென்றுள்ளார்.

அங்கு மருந்து விற்பனை பிரதிநிதியான ரமேஷ் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. அப்போது இருவரும் சேர்ந்து போதை மாத்திரை, போதை சிரிஞ்சுகளை அங்கு விற்பனை செய்துள்ளனர். பின்னர் தமிழ்நாட்டிற்கு வந்து தற்போது பிடிபட்டுள்ள மற்றவர்களுடன் சேர்ந்து

போதை மாத்திரை, ஊசிகளை பள்ளிகொண்டா, அணைக்கட்டு, அகரம்சேரி, விரிஞ்சிபுரம், கே.வி. குப்பம், குடியாத்தம், பேரணாம்பட்டு பகுதிகளில் அரசுப்பள்ளி மாணவர்கள், தனியார் கல்லூரி மாணவர்களை குறிவைத்து போதை மாத்திரைகளை விற்பனைசெய்துள்ளனர். இதையடுத்து கைதான 8 பேரையும் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி மத்திய சிறையில் அடைத்தனர். அவர்களிடம் இருந்து 100க்கும் மேற்பட்ட போதை மாத்திரை அட்டைகள், 50க்கும் மேற்பட்ட போதை ஏற்றும் ஊசிகள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட போதை மாத்திரைகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பள்ளிகொண்டாவில் போதை மாத்திரை விற்றதாக முதலில் 5 பேர் கைதான நிலையில், மேலும் 8 பேர் கைதான சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் அப்துல்லாபுரம் பகுதியிலும் போதை மாத்திரைகள் விற்பனை செய்ததாக கோபாலகிருஷ்ணன், வெங்கடேசன் என இருவரை விரிஞ்சிபுரம் காவல்துறையினர் கைது செய்தனர்.

# அரசு நிலத்தில் 40 வருடங்களாக குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க கோரி மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் கெடு!





கிருஷ்ணகிரி மாவட்டம் குருபரப்பள்ளி கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆட்சேபனையற்ற இடத்தில் பட்டா இல்லாமல் வசித்து வருகின்றனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஸ்ரீராமுலு என்பவர் கூறுகையில்,

குருபரப்பள்ளி கிராமத்தில் பலநூறு ஏக்கர் அரசு நிலம் உள்ளது இதில் கடந்த 40 ஆண்டுகளாக 140க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர், இதில் பலர் கான்கிரீட் கண்டிடங்களைக்கட்டி, மின் இணைப்பு பெற்று குடியிருந்து வருகின்றனர், கடந்த 40 வருடங்களாக போராடியும் எந்த அரசும் எங்களை பாதுகாக்க இது நாள் வரை வரவில்லை,

சமீபத்தில்தமிழகஅரசு ஆட்சேபனை அற்ற புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் பொது மக்களுக்கு பட்டா வழங்கலாம் என அரசாணை வழங்கியும் இதனால் வரைவட்டாட்சியர்அலுவலகத்தில் இருந்தோ மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்தோ யாரும் எங்களை வந்து சந்திக்கவில்லை.

பலமுறை மாவட்ட நிர்வாகத்திடம் பட்டா கேட்டு மனு வழங்கியும் இதுனால் வரை வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் எந்த நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வருகின்றனர்.

குருபரப்பள்ளியில் மிட்டாதாரர்கள் என்பவர்களின் கட்டுப்பாட்டில் பல ஏக்கர் நிலம் இருந்தது வருகிறது. அந்த நிலத்தில் தற்பொழுது ஏழை எளிய மக்கள் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு மிட்டார்களிடமிருந்து நிலத்தை மீட்டு ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுத்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் என பேசினார். அடுத்த 15 நாட்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை மாவட்ட நிர்வாகம் எடுக்கவில்லை என்றால் நாங்கள் அடுத்த கட்டமாக போராட்ட களத்தில் இறங்கி மக்களுக்கு நீதி கிடைக்க போராடுவோம் என பேட்டியின் போது ஸ்ரீராமலு கூறினார். இதில் 100 கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கொலையில் சேலத்தில் பதுங்கி இருந்த நாமக்கலை சேர்ந்த இரண்டு பேர் கைது

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை சேர்ந்தவர் முருகானந்தம் (35) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

இவரது தந்தை லிங்கசாமி கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு காங்கேயம் அருகில் கூலிப்படையாள் வெட்டிக்கோ படுகொலைசெய்யப்பட்டார்.

இந்த வழக்கு ஈரோடு நீதிமன்றத்தில் நடந்து வந்தது இவ்வலக்கில் ஆதாரங்கள் இல்லாததால் முருகானந்தத்தின் சித்தப்பா தண்டபாணி உட்பட அனைவரும் விடுதலையினர் சித்தப்பா தண்டபாணிக்கு சட்டப்படி தண்டனை பெற்று தர முருகானந்தம் முடிவு செய்தார். அவர் நடத்தும் மெட்ரிக் பள்ளியின் நான்காவது தளம் சட்ட விரோதமாக கட்டப்பட்டு உள்ளது என்று அதனை நீதிமன்றத்தின் மூலம் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றார்.

ஒட்டுமொத்த பள்ளி கட்



டிடமும் முறைகேடாக கட்டப்பட்டு இருப்பதாக வழக்கு தாக்கல் செய்தார் இது தொடர்பாக பள்ளியின் உறுதித் தன்மையை பார்வையிட கடந்த 28ஆம் தேதி முருகானந்தம், ரகுராம், அவரது வக்கீல் தினேஷ் உள்பட நாலு பேர் பள்ளிக்குச் சென்றனர் அப்போது அப்பகுதியில் பதுங்கி இருந்த கூலிப்படையினர் முருகானந்தம் ரகுராம் தினேஷ் ஆகியோரை வெட்டினர். இதில் முருகானந்தம் பரிதாபமாக உயிரிழந்தார் இது குறித்து தாராபுரம் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்தனர். இந்நிலையில் பள்ளியின் தாளாளர் தண்டபாணி மற்றும் கூலிப்படையை சேர்ந்த திருச்சி மாவட்டம் முசிறி தட்சிணாமூர்த்தி ( 29), சேலம் போளூர் ராம்குமார் (22), நாமக்கல் சுந்தரம் (26), திருச்சி நாகராஜன் ( 29), தாராபுரம் நாட்டு துறை (65) ஆகியோர் போலீசில் சரணடைந்தனர். மேலும் வக்கீல் படுகொலையில் தலைமறைவாக உள்ள கூலிப்படையை சேர்ந்தவர்கள் சிலரை தனிப்படையினர் தேடி வருகின்றனர்

இந்நிலையில் நேற்று அதிகாலை சேலம் கோரிமேடு பகுதியில் பதுங்கி இருந்த நாமக்கல்லை சேர்ந்த சசிகுமார், பாலமுருகன் ஆகிய இரண்டு நபர்களை கைது செய்தனர். அவர்களை தாராபுரத்திற்கு விசாரணைக்காக அழைத்து வந்தனர் . தலைமறைவாக உள்ள குற்றவாளிகளை தனி படையினர் தேடி வருகின்றனர்

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் உண்டியல் எண்ணிக்கை



திருச்செந்தூர், ஆக.2

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் ஜூலை மாத உண்டியல் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சம் பக்தர்களால் செலுத்தப்பட்டிருந்து..

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் உண்டியல்கள் மாதந்தோறும் எண்ணப்படுகிறது. ஜூலை மாதத்திற்கான உண்டியல் காணிக்கைகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டது.

கோயில் தக்கார் அருள்முருகன் தலைமை வகித்தார். இணை ஆணையர் ஞானசேகரன் முன்னிலை வகித்தார். இந்த உண்டியல் என்னும் பணியில் சிவகாசி பதினெண் சித்தர் மடம் பீடம் குருகுல வேத பாடசாலை உழவார பணிக்குழுவினர் மற்றும் கோயில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

இதில் நிரந்தர உண்டியல் மூலம் காணிக்கையாக ரூ. 3 கோடியே 84 லட்சத்து 64 ஆயிரத்து 297ம் தங்கம் ஆயிரத்து 530 கிராம், வெள்ளி 22ஆயிரத்து 500 கிராம்,

வெளிநாட்டு கரன்சிகள் 833 பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

உண்டியல் எண்ணும் பணியில் முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், நாகர்கோவில் உதவி ஆணையர் தங்கம், உதவி ஆணையர் நாகவேல், அலுவலக சூப்பிரண்டு ரோகினி, அறநிலையத்துறை இன்ஸ்பெக்டர் செந்தில் நாயகி, பொதுமக்கள் பிரதிநிதியாக வேலாண்டி, கருப்பன், மோகன் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூரில் எடப்பாடி பழனிச்சாமி எழுச்சி உரையாற்றினார்

மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் பிரச்சார பயணமுதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சு திமுக கட்சி அல்ல கார்பரேட் கம்பெனி ஆட்சி தேவையாகுடும்ப உறுப்பினர்கள் மட்டுமே கட்சி பொறுப்பு. ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியும் குடும்ப ஆட்சிக்கு விடையளிக்கும் தேர்தல்தான் 2026 ஊழல் பெருகியது.

அரசு அலுவலகங்களில் ஊழல் பெருகியுள்ளது டாஸ்மாக்கில் 40 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது திமுகவின் தாரக மந்திரம் கலெக்ஸன் கமிஷன் கரப்ஸன் இங்கு 70% வசிக்கிறீர்கள் விவசாயிகள் காவிரி குண்டாறு திட்டம் காவிரி குண்டாறு திட்டம் 14600 கோடி காவிரி குண்டாறு திட்டம் அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டது திமுக அரசு அதனை கிடப்பில் போட்டுவிட்டன் அதிமுக ஆட்சி அமைந்ததும் காவிரி குண்டாறு திட்டம் நிறைவேத்தப்படும் 540



கோடி பயிர் காப்பீடு பெற்றுத் தந்துள்ளோம். அதிமுக மதசார்பற்ற கட்சி

இங்கு ஜாதி மதம் கிடையாது திமுக அரசு 523 வாக்குறுதிகளில் 10% மட்டுமே நிறைவேற்றியு ள்ளனதேர்தல் வருவதால் திமுக பொய்யான வாக்குறுதிகளை கூறி மக்களை ஏமாற்றி வருகிறது கஜா புயல் கொரோனா பேரிடர்காலத்தில் சிறப்பாக விலைவாசி உயராமல் அதிமுக


அரசுகள் சிறப்பாக நடந்தது இவ்வாறு பேசினார் பிச்சாரத்தில் மாவட்ட கழக செயலாளர் எம்.ஏ.முனியசாமி மகளிரணி இணை செயலர் கீர்த்திகா முனியசாமி கழக எம் ஜி ஆர் மன்ற துணை செயலாளரும் முன்னாள் மாவட்ட ஊரட்சி சேர்மனுமான வழக்கறிஞர் மு.சுந்தரபாண்டியன்கமுதி ஒன்றிய கழக செயலாளர் பெருநாளி காளிமுத்து கமுதி ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன் கருமலையான் முதுகுளத்தூர் ஒன்றிய செயலாளர் எஸ் டி.செந்தில் குமார், ஒன்றிய அவை தலைவர் எஸ்.கதிரேசன், வார்டு செயலாளர் செல்லயா உள்பட பொதுமக்கள் திரளாககலந்து கொண்டனர்.

# கம்பம் மெட்டு மலைச்சாலையில் மழை நீர் சாலையில் தேங்காதவாறு செடி, கொடிகள் அகற்றம்

கம்பம், ஆக. 2

தேனி மாவட்டம் கம்பத்தில் இருந்து 13 கி.மீ. தொலைவில் 18 ஆபத்தான கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட கம்பம் மெட்டு மலைச்சாலையின் வழியாக கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள நெடுங்கண்டம், கட்டப்பனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு தினமும் ஏராளமான பஸ்கள், தோட்ட தொழிலாளர்கள் செல்லும் ஜீப்புகள் உள்ளிட்ட வாகனங்கள் சென்று வருகிறது.

இந்நிலையில் இந்த சாலையின் நடுவே ஆங்காங்கே சிறு, சிறு பால



ங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலங்களில் இருபுறமும் செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்து மழை காலங்களில் மழை நீர் செல்ல முடியாத நிலையில் சாலையின் நடுவே தேங்கி விடுவதால் இவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகளுக்கு பெரிதும் இடையூராக உள்ளது.

இதன் காரணமாக நெடுஞ்சாலை துறை உதவி செயற்பொறியாளர் உத்தரவின் படி சாலை பணியாளர்கள் இருபுறமும் உள்ள செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்து சாலையில் மழை நீர் தேங்காதவாறு வடிகால் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தென்காசி நகராட்சி தினசரி காய்கறி சந்தை வியாபாரிகள் கடை அடைப்பு போராட்டம்



தென்காசி ஆகஸ்ட் 02

தென்காசி மாவட்டம் தென்காசி நகராட்சி தினசரி சந்தையில் ஏற்கனவே கடை நடத்தி வந்த அனைவருக்கும் புதிய கட்டிடத்தில் கடை ஒதுக்கீடு செய்யக்கோரி நேற்று கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது பற்றி தென்காசி நகராட்சி தினசரி சந்தை காய்கறி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி . வெங்கடேஷ் கூறியதாவது:

தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட தென்காசி தினசரி காய்கனி சந்தையில் வியாபாரிகளாகிய நாங்கள் சுமார் 40 வருட காலமாக தினசரி குத்தகை செலுத்தி 120 கடைகளை நடத்தி வியாபாரம் செய்து வந்தோம்.

அதன்படி நாங்களும் எங்களது வியாபாரம், மற்றும் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாற்று இடத்தில் வணிகம் செய்வதற்கு தென்காசி நகர்மன்ற தலைவரிடம் கோரிக்கை விடுத்தோம். எங்கள் கோரிக்கையை ஏற்று எங்களுக்கு தென்காசி தென்காசி நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவரான ஆர்.சாதிர் இருவரும் சேர்ந்து நாங்கள் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கு வசதியாக அருகில் உள்ள தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட பூங்கா வளாகத்தில் 100 கடைகளை அமைத்து தொடர்ந்து வியாபாரம் செய்து வர ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

அதில் நாங்கள் 01.03.2024 அன்று கடைகள் கிடைக்கப் பெற்று நகராட்சி ஆணையாளர் வழங்கும் காய்கனி வியாபாரத்திற்கு உரிய வணிக உரிமம் பெற்று மேலும் உணவு மற்றும் பாதுகாப்பு சான்று பெற்று, தொழில் வரி செலுத்தி காய்கனி வியாபாரம் செய்து வருகிறோம். வருகிறோம்.

இந்நிலையில் தென்காசி நகராட்சி தினசரி காய்கறி சந்தைக்கான புதிய கட்டிடம் பணி நிறைவு பெற்றுவிட்டது. ஏற்கனவே நாங்கள் பலமுறை கேட்டுக் கொண்ட படி பழைய கட்டிடத்தில் கடை நடத்திய அனைவருக்கும் புதிய கட்டிடத்தில் கடை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். என்று தென்காசி நகராட்சி ஆணையாளர், தென்காசி நகர் மன்ற தலைவர், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடம் தொடர்ந்து கோரிக்கையை முன்வைத்து வருகிறோம்.

இந்நிலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளை நகராட்சி மூலம் பொது ஏலம் விட முயற்சிப்பதாக அறிகிறோம். ஆகையால் தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட புதிய மார்க்கெட்டில் உள்ள கடைகளை நெடுங்காலமாக காய்கனி வியாபாரம் செய்து வரும் காய்கனி வியாபாரிகளாகிய எங்களுக்கு அரசு அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் நியாயமான மாத வாடகைக்கும், நியாயமான முன் தொகைக்கும், எங்களுடன் புரிந்துணர்வு செய்து தீர்மானித்து பொது ஏலம் தவிர்த்து, ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இதில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் வரும் 15.08.2025 அன்று தென்காசி நகராட்சி தினசரி சந்தை காய்கனி வியாபாரிகள் தங்களின் குடும்பத்தோடு இணைந்து உண்ணாவிரத அறப்போராட்டம் நடத்துவது என்று நடைபெற்ற எங்களது சங்க கூட்டத்தில் முடிவு செய்துள்ளோம்.

என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு தென்காசி நகராட்சி தினசரி காய்கறி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி வெங்கடேஷ் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி: மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்

திண்டுக்கல், ஆக. 2

திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் துறை சார்பில் தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் செ.சரவணன் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

உலக தாய்ப்பால் வார விழா ஆகஸ்ட் 01ஆம் தேதி முதல் 07ஆம் தேதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் துறையின் சார்பில் மாவட்ட அளவில் தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்



உலக தாய்ப்பால் வார விழா விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெறறது.

இவ்விழிப்புணர்வு பேரணி மாவட்ட கலெக்டர் முகாம் அலுவலகத்திலிருந்து தொடங்கி திண்டுக்கல் பேருந்து நிலையம் வரை நடைபெற்றது. அங்கன்வாடி பணியாளர்கள் 150 நபர்கள் மற்றும் அமைதி அறக்கட்டளை நிறுவனர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள், தாய்ப்பால் குழந்தைக்கு முதல் தடுப்பூசி, தாயின் அன்பும் ஆரோக்கியமும் தாய்ப்பாலில் !, தாய்ப்பால் குழந்தையின் உயிர் நீர்!, தாய்ப்பால் பாலல்ல வாழ்வின் பலம்! என்பது போன்ற விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர்(பொ) பெ.விஜயராணி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் திட்ட அலுவலர்(பொ) மா.அமுதகலா, திண்டுக்கல் மற்றும் பழனி தாய் சேய் நல அலுவலர்கள், திண்டுக்கல் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் கலந்துக் கொண்டனர்.

# சின்னாறு எஸ்.பெண்டில் மற்றும் ஆட்டோ கவிழ்ந்து 5 வயது குழந்தை உயிரிப்பு

திருப்பூர் மாவட்டம் உடுமலைமறையூர் சாலையில் எஸ்.பெண்ட் அருகே சென்று கொண்டிருந்த ஒரு ஆட்டோ திடீரென தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்கு ள்ளானது. இதில் பயணம் செய்த ஷாலினி(5) சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

மற்றவர்கள் காயத்துடன் தப்பித்தனர். ஷாலினி மறையூர் நிகில்ஷா என்பவரின் மகள் ஆவார். மறையூரில் இருந்து உடுமலை



அருகே உள்ள அமராவதி அணைப் பகுதிக்கு நேற்று மாலை சுற்றுலா வந்தவர்கள் இந்த விபத்தில் சிக்கிக் கொண்டனர்.



உடுமலையில் இருந்து சின்னார் வரையில் சேதம் அடைந்த சாலையே இந்த விபத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

# நத்தம் தில்லை காளியம்மன் கோவில் கும்பாபிஷேகம் விழா

நத்தம்,ஆக 2

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் செட்டியார் குளத் தெருவில் உள்ள தில்லை காளியம்மன் கோவிலில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதையொட்டி கடந்த 29ம் தேதி முதல் நாள் அனுக்கை, தனபூஜை, கணபதி ஹோமம், முதல கால யாகசாலை பூஜைகள் நடந்தது.பின்னர் அதே யாகசாலையில் இரண்டு நாட்கள் பூர்ணாகுதி தீபாராதனைகள் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கால யாக பூஜைகள் நடந்தது. தொடர்ந்து நேற்று காலை ஆறு கால யாகசாலை பூஜைகளை தொடர்ந்து காசி, ராமேஸ்வரம்,



கரந்தமலை, அழகர் மலை உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்த குடங்கள் பூஜைகளுக்கு பிறகு யாகசாலையில் இருந்து கோபுர உச்சிக்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க குடம்,குடமாக கலசத்தில் புனித தீர்த்தங்கள் ஊற்றப்பட்டது. அப்போது வானத்தில் கருடன்கள் வட்டமிட்டன. இதில் சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பூஜை மலர்களும், புனித தீர்த்தங்களும், அன்னதானமும் வழங்கப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை தில்லை காளியம்மன் கோவில் பூசாரிகள் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# சநாதன தர்ம விழிப்புணர்வு விஜய பாதயாத்திரை நிறைவு விழா

சென்னை அம்பத்தூர் அடுத்த கொரட்டூர் அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் அறம் வளர்த்த நாயகி சேவை மையம் நடத்திய ஸநாதந தர்ம விழிப்புணர்வு விஜய யாத்திரை நிறைவு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் 15 மஹான்கள் 18 சித்தர்கள் ஆகிய உற்சவர்களுக்கு வண்ணமலர்களால்அலங்கரிக்கப்பட்டு மேடையில் அமைக்கப்பட்டது. இதணைத்தொடர்ந்து கைலாய வாத்தியத்துடன் பன்னிரு திருமுறைகள் நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற புனித நூல்கள் சுமந்து சென்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது .இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தவத்திரு பேரூர் ஆதீன 25வது பீடாதிபதி சாந்தலிங்க மருதாசல அடிகளார், மன்னார்குடி பாரதிய துறவியர்கள் சங்




கத்தின் அகில பாரத துணைத்தலைவர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீசெண்டலங்காரசெண்பகமன்னார் இராமானுஜ ஜீயர், திருச்சி மாவட்டம் திருஈங்கோய்மலை யோகினி ஜெயாம்பா ஸரஸ்வதி, வெள்ளி மலை ஸ்ரீ விவேகானந்தா ஆசிரமம் சுவாமி சைதன்யானந்தமகராஜ், சென்னைவிவேகானந்தா கல்லூரியின் செயலாளர் சுவாமி த்யான கம்மியானந்தா, சென்னை வளாகம் அம்ரிதா விஷ்வ வித்யா பீடத்தின் நிர்வாக இயக்குனர் சுவாமி வினயாமிர்தானந்தபுரி, கோயம்புத்தூர் ஆனைகட்டி ஸ்ருதி சேவா டிரஸ்ட் ஆர்ஷவித்யா குருகுலத்தின் அறங்காவலர் சுவாமி ஜகதாத்மாநந்த சரஸ்வதி, அறம்வளர்த்த நாயகி சேவை மையத்தின் காப்பாளர் திருக்ருஷ்ண ஜகந்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு இறையருள் உறையாற்றினர். பின்னர் அனைவருக்கும் பகவத் கீதை புத்தகம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஆன்மீக சிந்தனையாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். முடிவில் பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# கிரெடிட் அக்சஸ் கிராமின் லிமிடெட் சார்பில் 10 மற்றும் 11ஆம் வகுப்பு படித்து முதல் 4 இடங்களை பிடித்த 20 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் காசோலைகள்

கிரெடிட் அக்சஸ் கிராமீன் லிமிடெட் என்பது ஒரு முன்னணி இந்திய சிறுநிதி நிறுவனமாகும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு சிறு கடன்களை வழங்குவதில் இந்நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் கிராமப்புற உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சி அளித்தல், நடமாடும் சுகாதாரப் பரிசோதனை வாகனத்தின் மூலம் பொதுமக்களுக்கு நோயறிதல், புற்றுநோய் பரிசோதனை மற்றும்




ஆரம்ப சுகாதார சேவைகள் வழங்குதல் மற்றும் தொழில் மற்றும் வாழ்வாதாரத் திறன் பயிற்சி மற்றும் மாணவர்களுக்கு உதவித்தொகை என பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதனடிப்படையில், கிரெடிட் அக்சஸ் கிராமீன் லிமிடெட் சார்பில் இன்றையதினம் திருநெல்வேலி மாவட்டத்தில் 5 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிகளிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 மற்றும் 11ஆம் வகுப்பு படித்து முதல் 4 இடங்களை பிடித்த 20 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10 ஆயிரத்திற்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழினை மாவட்ட கலெக்டர் இரா.சுகுமார், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார்கள்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

2.8.2025

# ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் விருந்து மண்டபக் கட்டிடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவகக் கட்டடம் திறப்பு



மதுரை, ஆக. 2

மதுரை மாவட்டம், ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபக் கட்டிடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய உணவகக் கட்டடம் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டர் கே.ஜே.பிரவீன் குமார் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்.

ஓட்டல் தமிழ்நாடு மதுரை அலகு 2ற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் கூடுதல் வருவாய் ஈட்டும் நோக்கோடும் நவீன வசதிகளுடன் கூடிய நிகழ்விடங்கள், உணவறைகள், சமையலறை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டிடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்குச் சொந்தமான தமிழ்நாடு ஓட்டல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ப பல்வேறு வசதிகளை மேம்பாடு செய்து புதுப்பொலிவுடன் சிறப்புற மட்டுமின்றி திருமணம், வர்த்தக கருத்தரங்கு, சமூக நிகழ்ச்சிகள் அரசு விழாக்கள் நடைபெறும் வகையில் சிறந்த வர்த்தக நட்சத்திர விடுதியாக செயல்பட்டு வருகிறது.

மதுரையில் அழகர் கோவில் சாலையிலும், பெரியார் பஸ் நிலையம் அருகேயும் ஓட்டல் தமிழ்நாடு' என்ற பெயரில் ஓட்டல்கள் செயல்படுகின்றன. குறைவான வாடகையில் காலை இலவச உணவு வசதியுடன் கூடிய குளிர்சாதன வசதி உள்ள அறைகளும், குளிர்சாதன வசதி அல்லாத அறைகள், விசாலமான கார் நிறுத்தம், கருத்தரங்குக் கூடங்கள் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய மதுபானக்கூடம், குழந்தைகள் விளையாட்டு சாதனங்களுடன் கூடிய விளையாட்டு மைதானம் மற்றும் அதிநவீன மின் உலர் சலவையகம் ஆகிய வசதிகள் உள்ளன. மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள ஓட்டலில் குளிர்சாதன வசதி உள்ள அறைகளும், குளிர்சாதன வசதி அல்லாத அறைகளும், "இயல்" "இசை", என்னும் கூடங்களும், மேலும்400 நபர்கள் அமரக்கூடிய "நாடகம்" என்னும் திருமண அரங்கும் மற்றும் "முத்தமிழ்" என்னும் குளிர்சாதன வசதியுடன் கூட்ட அரங்கமும் பிரமாண்டமான முறையில் சிறப்புற அமையும் ''நாட்டியம்" என்னும் திறந்தவெளி அரங்கு பல்வேறு சமூக நிகழ்ச்சிகள் சமூக நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்கு பொருட்காட்சி ஆகியவற்றிற்கு குறைந்த வாடகைக்கு அளிக்கப்படுகிறது.

மேலும் "அமுதகம்" எனப்படும் குளிரூட்டப்பட்ட பல்சுவை உணவகம் தங்கும் விருந்தினர் மற்றும் பிற விருந்தினர்களுக்காக காலை06.00மணி முதல் இரவு09.30மணிவரை செயல்படுகிறது. இவ் உணவகத்தில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் விரும்பி உண்ணக் கூடிய தென்னிந்திய, வடஇந்திய மற்றும் சைனீஸ், தந்தூரி உணவு வகைகள் சரியான விலையில் செயற்கை நிறமூட்டிகளோ, சுவையூட்டிகளோ சேர்க்கப்படாமல் தரமானதாக தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது நவீன வசதிகளுடன் கூடிய நிகழ்விடங்கள், உணவறைகள், சமையலறை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டமைப்புடன் மேம்படுத்தப்பட்டுள்ள ஓட்டல் தமிழ்நாடு மதுரை மாநகர மக்களுக்கு மிகப்பெரிய பயனுள்ளதாக அமையும்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் இந்திராணி பொண்வசந்த், சட்டமன்ற உறுப்பினர் (மதுரை வடக்கு) கோ.தளபதி, மாநகராட்சி துணை மேயர் நாகராஜன். மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மாவட்ட சுற்றுல அலுவலர் சோ.ஸ்ரீபால முருகன், மண்டல மேலாளர் (தெற்கு) மு.கணேஸ்வரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத்தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோபால்சாமி நியமனம்

ராஜபாளையம்,ஆக. 2

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா ஒப்புதலுடன் தமிழ் மாநில தலைவரும் சட்டமன்ற குழு தலைவருமான நயினார் நாகேந்திரன் ராஜபாளையம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோபால்சாமியை மாநில துணை தலைவராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார். ராஜபாளையம் நகரின் வளர்ச்சி திட்ட பணிகளுக்கு மூல காரணமாக விளங்கிய முன்னாள் எம்.எல்.ஏ கோபால்சாமி பாரதிய ஜனதா கட்சியின் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் மாநில துணை தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார்.



மாநில துணை தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள ராஜபாளையம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோபால்சாமிக்கு நகர் முக்கிய பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்தனர்

# மயிலாடுதுறை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: கலெக்டர் ஆய்வு

மயிலாடுதுறை, ஆக. 2

மயிலாடுதுறை மாவட்ட அரசு பெரியார் தலைமை மருத்துவமனையை திடீர் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் புறநோயாளிகள் பிரிவு, சிகிச்சை பதிவு அறை, மருந்தகம், குழந்தைகளுக்கான மருத்துவ சேவைகள் பிரிவு உள்ளிட்டவைகளை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகளை ஆய்வு செய்தார்கள்.

தொடர்ந்து, தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும் முறையாக கிடைக்கிறதா என்பதை அங்கிருந்த மக்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டறிந்தார்கள். பின்னர், வாணாதிராஜபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்துரையாடி, அவர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் மதிய உணவு, குடிநீர் உள்ளிட்டகளை ஆய்வு செய்தார்கள். பின்னர், கடலங்குடி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பார்வையிட்டு, துறை சார்ந்த சேவை அரங்குகளை ஆய்வு செய்தார்கள். பெறப்பட்ட மனுக்களின் விவரங்களை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்டறிந்தார்கள்.

# இன்றைய ராசி பலன்கள் (2.8.2025)




நல்ல செய்தி கேட்க வாய்ப்பு உள்ளது. கடன் சுமை குறையும். பயணங்களில் லாபம் உண்டு.




வீட்டிலே மகிழ்ச்சி சூழ்நிலை. தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.




இன்றைய நாள் சவாலானது. பணி தொடர்பான மாற்றங்கள் ஏற்படலாம். நிதி மேலாண்மை அவசியம்.




புதிய முயற்சிகள் வெற்றி தரும். உறவினர்களுடன் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சோர்வு உண்டாகலாம்.




உதவிக்கரம் நீட்டும் நாள். பழைய கடன் தீரும். நண்பர்கள் உதவியாளர்களாக இருப்பார்கள்.




நல்ல வரவேற்பு கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம். மனதில் உள்ள சந்தேகங்கள் அகலும்.




முன்னோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. பணவாய்ப்புகள் அதிகம்.




மன அழுத்தம் அதிகம். ஆரோக்கியத்தில்கவனம்தேவை. தொழிலில் தாமதம் ஏற்படலாம்.




தயாரிப்புகளில் லாபம். தொழில் வளர்ச்சி தெரியும். உறவினர்கள் ஊக்கம் தருவார்கள்.




மனநிலை புத்துணர்ச்சி பெறும். திட்டமிட்டு செயல்பட நல்ல நாள். குடும்பஉறுப்பினர்களுடன் நேரம் செலவிடுவீர்கள்.




இரண்டு வேலையின் பயனும் கிடைக்கும். செல்வாக்கு உயரும். புதிய தொடக்கத்திற்கு நல்ல நாள்.




அமைதியான நாள். தொழிலில் பழைய பிரச்சனைக்கு தீர்வு. பண வரத்து திருப்திகரமாக இருக்கும்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய ஆய்வுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய ஆய்வுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் கனிமொழி பத்மநாபன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 04 துய்மை பணியாளர்களுக்கு ரூ.6,55,000/ மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள், 50 பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் 50 பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டைகளும் வழங்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் (பொ) ராமச்சந்திரன், மாவட்ட மேலாளர் (தாட்கோ) ராஜ் குமார், தமிழ்நாடு தூய்மைப்பணியாளர்கள் நல வாரிய மாநில உறுப்பினர் பூ.மூக்கையா, உதவி மேலாளர் ரா.அருணாசலம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி அலுவலர்கள், மாநில தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் தாட்கோ அலுவலக பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 71வது திரைப்பட விருதுகள் அறிவிப்பு: சிறந்த இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ்




இந்தியாவின் 71ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தில்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த தேர்வுக்கான போட்டியில் 332 படங்கள் இடம்பெற்றன. தமிழில் சிறந்த திரைப்படமாக பார்க்கிங் படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்படத்தில்ஹரிஷ்,கல்யாண்,எம்.எஸ்.பாஸ்கர்உள்ளிட்டோர்நடித்திருந்தனர். அறிமுக இயக்குநராக ராம்குமார் பாலகிருஷ்ணன் பார்க்கிங் படத்தை இயக்கியிருந்தார்.

பிரபல தெலுங்கு இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவான திரைப்படம் 'வாத்தி'. பிரபல தயாரிப்பாளர் நாக வம்சி தயாரிக்கவுள்ள இப்படம், நேரடியாக தெலுங்கிலும் வெளியாகவுள்ளது. இப்படத்திற்கு தெலுங்கில் 'சார்' என்றும், தமிழில் 'வாத்தி' என்றும் தலைப்பு வைக்கப்பட்டிருந்தது. சம்யுக்தா மேனன் கதாநாயகியாக நடித்த இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்திருந்தார்.

இந்த நிலையில், சிறந்த இசையமைப்பாளராக 'வாத்தி' திரைப்படத்துக்கு இசையமைத்த ஜி.வி. பிரகாஷுக்கு வழங்கப்படுகிறது.

# 71வது திரைப்பட விருதுகள் அறிவிப்பு: 3 தேசிய விருதுகளை வென்ற பார்க்கிங்




அறிமுக இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண்நடிப்பில்வெளியானகடந்த2023ம்ஆண்டுதிரையரங்குகளில் வெளியான படம் 'பார்க்கிங்'. இதில் ஹரிஷ் கல்யாணுக்கு ஜோடியாக இந்துஜா நடித்துள்ளார். மேலும் எம் எஸ் பாஸ்கர், பிரார்த்தனா நாதன் மற்றும் பலர் இந்த படத்தில் நடித்திருந்தனர்.படத்துக்கு சாம் சி.எஸ். இசையமைத்தார்.

திரில்லர்டிராமாவான இந்ததிரைப்படத்தை 'பலூன்' பட இயக்குனர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ் பேக்டரி சார்பில் தயாரித்துள்ளார். மேலும் பேஷன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளது. படம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. வாடகை வீட்டில் இருக்கும் ஒருவருக்கும், வீட்டு உரிமையாளருக்கும் இடையில் காரை பார்க் செய்வது தொடர்பாக எழும் மோதல்களே படத்தின் கதை.

பார்க்கிங் திரைப்படம் 5 மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. 4 இந்திய மொழிகளிலும் ஒரு சர்வதேச மொழியிலும் இத்திரைப்படம் ரீமேக் ஆகியுள்ளது.

இந்நிலையில், 2023ம் ஆண்டுக்கான சிறந்த தமிழ் படமாக 'பார்க்கிங்' படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த தமிழ் படம், சிறந்த திரைக்கதை, சிறந்த துணை நடிகர் ஆகிய 3 பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளது. சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதை பார்க்கிங் படத்திற்காக நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் பெற்றுள்ளார்.

# சிறு வயதில் அப்படி நடித்தது தவறுதான் வாலி பட நடிகை



டி.வி. தொடர்களில் நடித்து பிரபலமானவர், தேவிப்பிரியா. பெரும்பாலும் வில்லி கதாபாத்திரங்களிலேயே நடித்து வருவதால், இல்லங்கள் தோறும் இல்லத்தரசிகளின் திட்டுகளுக்கு ஆளாகிக்கொண்டே இருக்கிறார். வாலி, காக்க காக்க,காதல் கொண்டேன்,காதல், விருமாண்டி உள்ளிட்ட சில படங்களிலும் தலைகாட்டியுள்ளார். இதுதவிர 'டப்பிங்'கலைஞராகவும் செயல்பட்டு வருகிறார்.

இதற்கிடையில் தனது சினிமா பயணம் பற்றி தேவிப்பிரியா பகிரும்போது, "எனது சிறு வயதிலேயே நான் நடிக்க வந்துவிட்டேன். சின்னத்திரையில் வாய்ப்புகள் குவிந்ததால், என் கவனம் வெள்ளித்திரைக்கு செல்லவில்லை. என்னுடன் நடித்த தேவதர்ஷினி போன்றவர்கள் சரியான நேரத்தில் வெள்ளித்திரையில் தலைகாட்டி வந்தார்கள். சின்னத்திரையில் கிடைத்த வாய்ப்புகள் அத்தனையையும் பயன்படுத்தி நடித்ததால், சினிமாவில் ஜொலிக்க முடியவில்லை. சில நேரம் இப்படி நடித்தது தவறுதான் என்றும் எண்ணிக்கொள்வேன்" என்றார். இந்தப்பேட்டி தற்போது சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# அவன் என்ன போடுறான்னே.. கருண் நாயருடன் தமிழில் பேசிய வாஷிங்டன் சுந்தர்.. வீடியோ வைரல்

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது மற்றும் 3வது டெஸ்டில் இங்கிலாந்தும், 2வது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. 4வது டெஸ்ட் 'டிரா' வில் முடிந்தது. இதனால் தொடரில் இங்கிலாந்து 21 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.இதையடுத்துயஷஸ்விஜெய்ஸ்வாலும்,லோகேஷ்ராகுலும்இந்தியாவின்இன்னிங்சைதொடங்கினர். ஜெய்ஸ்வால் (2 ரன்) அட்கின்சன் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.அடுத்து தமிழகத்தை சேர்ந்த சாய் சுதர்சன் இறங்கினார். சிறிது நேரத்தில் மற்றொரு தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் (14 ரன், 40 பந்து, ஒரு பவுண்டரி) கிறிஸ் வோக்ஸ் பந்து வீச்சில் போல்டானார்.

இந்தியா 2 விக்கெட்டுக்கு 72 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. அதனால் முன்கூட்டியே மதிய உணவு இடைவேளை விடப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து மழை கொட்டியதால் 2 மணி நேரம் ஆட்டம் பாதிக்கப்பட்டது. ஆட்டம் மீண்டும் தொடங்கிய போது கேப்டன் சுப்மன் கில் (21 ரன், 35 பந்து, 4 பவுண்டரி) தேவையில்லாமல் ரன்அவுட் ஆனார். தொடர்ந்தது. சாய் சுதர்சன் 38 ரன்களில் (108 பந்து, 6 பவுண்டரி) விக்கெட் கீப்பர் ஜேமி சுமித்திடம் சிக்கினார். அடுத்து வந்த ரவீந்திர ஜடேஜா (9 ரன்), துருவ் ஜூரெல் (19 ரன்) நிலைக்கவில்லை.

தொடர்ந்து கருண் நாயர் , வாஷிங்டன் சுந்தர் இருவரும் இணைந்து நிலைத்து விளையாடினர் . சிறப்பாக விளையாடிய கருண் நாயர் அரைசதமடித்து அசத்தினார். இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 204 ரன்கள் அடித்திருந்தது. கருண் நாயர் 52 ரன்களுடனும்ம் , வாஷிங்டன் சுந்தர் 19 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழலில் 2வது நாள் ஆட்டம் இன்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே இந்திய அணி மேற்கொண்டு 20 ரன்களுக்குள் எஞ்சிய 4 விக்கெட்டுகளையும் இழந்து ஆல் அவுட் ஆனது. இந்திய அணி முதல் இன்னிங்சில் 69.4 ஓவர்களில் 224 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கருண் நாயர் 57 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் விளையாடி வருகிறது.

முன்னதாக இந்த ஆட்டத்தில் வாஷிங்டன் சுந்தர் கருண் நாயர் பார்ட்னர்ஷிப் அமைத்து விளையாடியபோது தமிழில் பேசிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் டாங் வீசிய ஒரு ஓவரை கருண் நாயர் எதிர்கொண்டார்.

அப்போது மறுமுனையில் இருந்த வாஷிங்டன் சுந்தர், கருண் நாயரை நோக்கி, "அவன் என்ன பந்து போடுறான்னே தெரிய மாட்டிங்கிது" என்று தமிழில் பேசினார்.

# 5வது டெஸ்ட்: 2வது நாளில் தலையில் வெள்ளை பேண்ட் அணிந்து விளையாடிய இங்கிலாந்து வீரர்கள்.. காரணம் என்ன..?

இந்தியாஇங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 69.4 ஓவர்களில் 224 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக கருண் நாயர் 57 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்சன் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி பென் டக்கெட் வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இந்திய அணியின் பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடி 92 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. பென் டக்கெட் 43 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து ஆலி போப் களமிறங்கினார். சிறப்பாக ஆடிய கிராவ்லி 64 ரன்களிலும், ஆலி போப் 22 ரன்களிலும் அவுட்டாகினார். தற்போது வரை இங்கிலாந்து அணி 26 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 147 ரன்கள் அடித்துள்ளது. ஜோ ரூட் 9 ரன்களுடனும், ஹாரி புரூக் 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்றைய நாள் ஆட்டத்தில் (2வது நாள்) இங்கிலாந்து வீரர்கள் தலையில் வெள்ளை பேண்டை அணிந்து களமிறங்கினர். இதற்கான காரணம் என்னவெனில், இங்கிலாந்து முன்னாள் வீரரான கிரகாம் தோர்பே கடந்த வருடம் (55 வயது) இயற்கை எய்தினார். 1993 2005 வரையிலான காலகட்டங்களில் இங்கிலாந்துக்காக அவர் 100 டெஸ்ட் 82 ஒருநாள் போட்டிகளில் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் பல வெற்றிகளில் பங்காற்றிய அவர் பெரும்பாலும் களத்திற்கு வரும்போது தலையில் ஹெட் பேண்ட் அணிவார். 1969 ஆகஸ்ட் 1ம் தேதி பிறந்த அவர் 2024 ஆகஸ்ட் 4ம் தேதி இயற்கை எய்தினார். அதனாலேயே அவருடையபிறந்தநாளானஇன்றுஇங்கிலாந்துஅணியினர் தலையில் வெள்ளை பேண்ட் அணிந்து அவரை கவுரவித்தனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.